# <u>மகிமையின் நம்பிக்கை</u>

"ஆத்மா என்றென்றைக்கும் அழியாதது, உடல் அழிந்துபோகக்கூடியது"

இது அனைவரும் அறிந்த ஒரு நம்பிக்கை.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில், ஆத்மா நமது இறப்புக்குப் பிறகு சாந்தியடையவும் கடவுளோடு ஐக்கியம் கொள்ளவும் வாஞ்சிக்கிறோம்.

இப்படி ஒரு நிலையான வாழ்க்கை கடவுளோடு நமக்கு இருக்கிறது என்று ஏதோ ஒரு வகையிலே ஒவ்வொரு மக்களும் நம்புகிறார்கள். அவர்களுக்கு தெரிந்த அளவிலே கடவுளை அடைய பல காரியங்களை மிகவும் பயபக்தியோடு செய்கிறார்கள்.

அளவிடமுடியாததும் அழிவில்லாததுமான கடவுளின் <u>மகிமையை</u> அறிந்து கொள்ள நமது அறிவாலே மட்டும் முடியாது. அப்படிப்பட்ட கடவுளை அடைய நம்முடைய முயற்சியின் <u>நம்பிக்கை</u> மட்டும் போதாது.

*உலக வாழ்க்கை நிலையில்லாதது:* நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. (குறள்: 336)

*மனிதனுடைய வாழ்க்கையைக் குறித்து வேதம் சொல்கிறது:*

மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், <u>மனுஷருடைய மகிமையெல்லாம்</u> புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது: <u>புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது</u>. (வேதம்: புதிய ஏற்பாடு: 1 பேதுரு 1:24)

*கடவுளின் மகிமை:*

மரித்தேன், ஆனாலும், இதோ, <u>சதாகாலங்களிலும்</u> உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.
(வேதம்: புதிய ஏற்பாடு: வெளிப்படுத்தின விசேஷம்: 1:18)

பரிசுத்தத்தில் மகத்துவமுள்ள ஆண்டவர், நமது ஆத்மாவிற்கு ஜீவனைக் கொடுத்து நம்மை ஜீவாத்மாவாக வாழ வழிவகுத்தவர். அவருடைய வழியிலிருந்து தவறி, பாவத்தில் வீழ்ந்து ஆத்மாவின் ஜீவனை இழந்த நம்மை, மீண்டுமாக ஜீவனைக் கொடுத்து, அவரிடத்திலே ஐக்கியம் கொள்ள ஒரு புதிய ஏற்பாட்டை உருவாக்கினார்.
ஆண்டவரே கிறிஸ்துவாக இந்த பூமிக்கு வந்து இதை செய்து முடித்தார்.

நாம் நல்லது செய்தால் போதும். இறந்தபிறகு கடவுளோடு இருப்போம்....இதுவும் ஒரு நம்பிக்கை.
"எந்த அளவிற்கு நல்லது செய்தால்...?" என்பதற்கு அவரவர்கள் ஒரு எல்லையை வகுத்து, <u>"இதைச் செய்தால் போதும்"</u> என்று ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்கிறார்கள்.

*நற்கிரியைகளைக் குறித்து வேதம் சொல்கிறது:*

<u>சோர்ந்துபோகாமல்</u> நற்கிரியைகளைச்செய்து, <u>மகிமையையும் கனத்தையும் அழியாமையையும்</u> தேடுகிறவர்களுக்கு <u>நித்தியஜீவனை</u> அளிப்பார். (வேதாகமம்: புதிய ஏற்பாடு: ரோமர் 2:7)

<u>Ref: Dictionary:</u>

**<u>நித்தியஜீவன்</u>**: நிலையான வாழ்க்கை, முடிவில்லாத வாழ்க்கை
**<u>தேடுவது என்ற வார்த்தை</u>**: தேடி ஆராய்ந்து கண்டுபிடித்து தியானித்து அறிந்துகொள்வது.
**<u>மகிமை:</u>** 1. சக்தி வாய்ந்த தன்மை: <u>மகத்தான தன்மை</u>: பெருமை: Power and glory.
2. (சக்திவாய்ந்த தன்மையினால்) பாதிப்பு: விளைவு:: impact
**<u>நம்பிக்கை</u>**: 1. (-ஆன) (ஒருவரின் அல்லது ஒன்றின் மேல்) <u>அனுபவம் ஏற்படுத்தும் உறுதி</u>: faith; confidence; trust; belief. 2. எதிர்பார்ப்பு: hope.

மனுஷருடைய மகிமையின்படியும் அவர்களுடைய வார்த்தையின்படியும் கடவுளை அடைய நம்பிக்கை வைக்காமல்,
அளவிடமுடியாததும் அழிவில்லாததுமான கடவுளின் <u>மகிமையின்படி,</u> கடவுளுடைய வார்த்தையோடு தினமும் ஐக்கியப்பட்டு, அந்த அனுபவம் ஏற்படுத்தும் உறுதியினாலே நம்பிக்கை வைத்து வாழுங்கள்.
உங்கள் ஆத்துமாவுக்கு ஜீவனைக் கொடுத்து அதைப் பரிபூரணப்படுத்த வல்லவரான கடவுள் உங்களை ஆட்கொண்டு ஆலோசனைக் கொடுத்து ஆசீர்வதிப்பார்.

நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.
(வேதம்: புதிய ஏற்பாடு: 1 தீமோத்தேயு 1:17)

அன்புடனும் ஜெபத்துடனும்,

Bro. M.Kalyanam